பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 45

## 2 நாட்களுக்கு மின் துண்டிப்பு இல்லை

நாட்டில் இன்று (13) ம் நாளை(14) யும் மின்சாரத் துண்டிப்பு இடம்பெற மாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கும் நோக்கோடு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அடுத்த வாரம் முதல் மின்சாரத் துண்டிப்பு இடம்பெறும் காலப்பகுதியைக் குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு விசேட அழைப்பு

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர்களை கலந்துரையாடலுக்கு அழைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று 5 நாளாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு கோரியும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாடளாவிய ரீதியில் இளைஞர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்த போராட்டம் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இரவு பகலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுடன் கலந்துரையான அரசாங்கம் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார்.



## தென்னாபிரிக்காவில் புதிய வைரஸ் கண்டுபிடிப்பு

**தென்னாபிரிக்கா தொற்றுநோய் தடுப்பு மையத்தின் இயக்குனர் துலியோ டி ஒலிவேரா கூறுகையில் "தென்னாபிரிக்காவில் புதிய வகை ஒமைக்ரான் வைரஸ்கள் கண்டறியப்பட்டு இருக்கின்றன. அவற்றுக்கு பிஏ.4 மற்றும் பிஏ.5 என பெயரிடப்பட்டுள்ளன. புதிய வைரஸ்கள் தென்னாபிரிக்காவில் தொற்றுநோய்களின் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. மேலும், அவை பல நாடுகளின் மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில் போட்ஸ்வானா, பெல்ஜியம், ஜெர்மனி, டென்மார்க் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் இந்த புதிய வகை வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.**

## சுபகிருது வருடப்பிறப்பு சுப நேரங்கள்

மலரும் மங்களகரமான சுபகிருது என்ற புதிய ஆண்டு (14.04.2020) வியாழக்கிழமை காலை 7.50 க்கு வாக்கிய பஞ்சாங்கப்படி பிறக்கிறது.

இதேவேளை மலரும் சுபகிருது என்ற புதிய ஆண்டு (14.04.2020) வியாழக்கிழமை காலை 8.41 க்கு திருக்கணித பஞ்சாங்கப்படி பிறக்கிறது.

அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்.




## டொலர் நெருக்கடிக்கு இதுதான் காரணம் - மத்திய வங்கி ஆளுநர்

நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு முறையற்ற கொடுக்கல் வாங்கல் முறைகள் தாக்கம் செலுத்தியிருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

முறையான வழிகளில் மாத்திரம் அந்நியச் செலாவணியை அனுப்புமாறும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ அறிவுறுத்தியுள்ளார்.

வங்கிகளின் ஊடாக மாத்திரம் டொலர்களை கொள்வனவு செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அரசாங்க தகவல் திணைக்களம்)



# மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(பைஷல் இஸ்மாயில்)

தமிழ், சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கிழக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அணியினர் ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றுள்ளது. திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியில் அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர் (ஓவருக்கு 04 பந்துகள்) 12 அணிகள் பங்குபற்றி இறுதிச்சுற்றுக்கு சுகாதார அமைச்சு அணியினரும், கல்வி அமைச்சு அணியினரும் தெரிவாகினர்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சுகாதார அமைச்சு அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. இதற்கமைய துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 45 என்ற வெற்றி இலக்கை நோக்கி கல்வி அமைச்சு அணி துடுப்பெடுத்தாடியது. 10 ஓவர் நிறைவில் 6 விக்கட்களை இழந்து ஒரு ஓட்டத்தினால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இச்சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ.வணிகசிங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஜ.கே.ஜீ.முத்துபண்டா, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திஸா நாயக்க, பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜலீல், சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் உள்ளிட்ட பல திணைக்களங்களின் செயலாளர்கள், மாகாண ஆணையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# 367 அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடு நீடிப்பு

367 அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன், உணவுப் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கு இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அப்பிள், வெண்ணெய், பேரீச்சம்பழம், தோடம்பழம், தயிர், யோகட், சொக்லேட், கோர்ன்ஃப்ளேக்ஸ் மற்றும் பெஸ்தா ஆகியவற்றின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்படும், இந்த கட்டுப்பாடுகள் தண்ணீர் போத்தல்கள், பீர், வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் சிகரெட்டுகள், வாசனை திரவியங்கள், அழகுசாதன பொருட்கள் மற்றும் முடிவெட்டும் இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு பொருந்தும்.

மேலதிகமாக, அதே கட்டுப்பாடுகள் குளிரூட்டி, குளிர்சாதன பெட்டிகள், சலவை இயந்திரம், வெதுப்பி, சமைப்பான், டோஸ்டர்கள் மற்றும் கோப்பி மற்றும் தேயிலை தயாரிக்க பயன்படும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கும் இந்த கட்டுப்பாடுகள் பொருந்தும், தொலைக்காட்சிப் பெட்டிகள், டிஜிட்டல் மற்றும் வீடியோ கெமராக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இசைக்கருவிகளுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

நாட்டின் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

ஆபத்தான பிரதேசங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக அடைமழை நிலவுமாயின் ஆபத்தான பிரதேசங்களில் உள்ள மக்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென்று நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

# உலகில் யாராலும் ரஷ்யாவை தனிமைப்படுத்த முடியாது - அதிபர் புதின்

உக்ரைன் மீது ரஷ்யா 49வது நாளாக போர் தொடுத்து வருகிறது. உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யாவிற்கு எதிராக பல்வேறு பொருளாதார தடைகளை உலக நாடுகள் பலவும் விதித்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 186 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். 344 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என உக்ரைன் அரசு தலைமை வக்கீல் அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும், ரஷ்ய படைகளின் தாக்குதல்களில் உக்ரைனில் உள்ள 938 கல்வி நிறுவனங்கள் சேதம் அடைந்துள்ளன. 87 கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. உக்ரைன் பத்திரிகையாளர்களை ரஷ்யா சிறை வைத்துள்ளது என உக்ரைன் துணை பிரதமர் இரினா வெரேஸ்சுக் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், உக்ரைன் பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியலமைப்பு நிர்வாகிகள், குடிமக்கள் உள்ளிட்ட பலரை ரஷ்ய அரசு சிறைகளில் அடைத்து உள்ளது என தெரிவித்தார்.

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள வேஸ்டாக்னி விண்வெளி ஏவுதள மையத்திற்கு சென்ற அதிபர் புதின் நிருபர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், ரஷ்யாவை உலகின் எந்த சக்தியாலும் தனிமைப்படுத்த முடியாது.

இன்றைய சூழலில், யாரையும் எந்த ஒரு நாடும் தனிமைப்படுத்துவது என்பது நிச்சயமாக சாத்தியம் இல்லாத ஒன்று. எங்களுடன் ஒத்துழைப்புடன் செயல்பட விரும்பும் நட்பு நாடுகளுடன் நாங்கள் பணியாற்றுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவைச் சேர்ந்த மூவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்

கொத்மலை, றம்பொடை நீர்வீழ்ச்சியில் நீராட சென்ற மூன்று இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். வவுனியாவில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

றம்பொடை நீர்வீழ்ச்சியில் ஒரே நேரத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் ஏழு இளைஞர்களும் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாகவும், சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த உயிர் காக்கும் படையினர் நான்கு இளைஞர்களின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்திருந்தனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன மேலும் மூன்று இளைஞர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். றம்பொடை நீர்வீழ்ச்சியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பிற்பகல் பெய்த கனமழை காரணமாக ரம்பொட நீர்வீழ்ச்சியின் நீர்மட்டம் திடீரென அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.